வேலூர் மாவட்ட கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் செயல்முறைகள்

ந.க.எண் 04/ ஒபக/2022 நாள் 14.10.2022

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – ஒருங்கிணைந்த பள்ளி – வேலூர் மாவட்டம் – மாதிரி பள்ளி – துவக்க விழாவில் தேர்வு செய்யப்பட்ட மாணவ / மாணவிகள் பெற்றோர்களுடன் கலந்து கொள்ள அறிவுறுத்த கோருதல் – தொடர்பாக |
| பார்வை | 1. சென்னை -6 தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண் 28886/டபிள்யூ 1/ இ1/2021 நாள் 12.09.2021<br>2. சென்னை -6 ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநிலத் திட்ட அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் 3210/அ1 1/ அ5/2021-22 நாள் 21-09-2022 |

பார்வை 1 ல் காணும் கடிதத்தின் படி, அரசு உண்டு உறைவிட மாதிரிப் பள்ளியின் தொடக்க விழா வேலூர், பெருமுகை, பிள்ளையார் குப்பத்தில் அமைந்துள்ள ஜி.ஜி ஆர் பொறியியல் கல்லூரியில் திங்கட்கிழமை ( 17.10.2022 ) காலை 9.00 மணிக்கு நடைபெற உள்ளது.

எனவே மாதிரிப் பள்ளியில் பயில்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இணைப்பில் உள்ள மாணவ / மாணவிகளை திங்கள் காலை 8.30 மணிக்குள் மேற்காண் கல்லூரிக்கு பெற்றோருடன் இணைப்பில் காணும் பள்ளி தலைமைஆசிரியர்களும் வருகை புரியுமாறு சார்ந்த பள்ளித் தலைமைஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் மாணவ / மாணவிகளுக்கு (7.10.2022 ) நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவித்த அறிவுரைகளை பின்பற்றும் படியும் திங்கள் கிழமை (17.10.2022) காலை 8.00 மணி முதல் 8.15 மணிக்குள் வேலூர் , ஸ்ரீ செல்லியம்மன் கோயில் ( புதிய பேருந்து நிலையம் ) அருகில் இருந்து கல்லூரி வரை செல்வதற்கு பேருந்து வசதி செய்யப்பட்டுள்ள தகவலினையும் மாணவ / மாணவியருக்கு தெரிவிக்குமாறு சார்ந்த பள்ளி தலைமைஆசிரியர்கள் மீள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் மாதிரி பள்ளிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இணைப்பில் உள்ள முதுகலை ஆசிரியர்களை திங்கள் (17.10.2022) காலை 7.30 மணிக்குள் மேற்காண் கல்லூரிக்கு வருகைப்புரியும் வண்ணம் பணியிலிருந்து விடுவித்து அனுப்புமாறு சார்ந்த பள்ளி தலைமைஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாதிரிப் பள்ளிக்கு மாற்றுப் பணியில் தெரிவு செய்யப்பட்டுள்ள முதுகலை ஆசிரியர்களுக்குப் பதிலாக உடனடியாக தகுதியுடைய தற்காலிக ஆசிரியர்களை SMC மூலமாக நியமனம் செய்துக் கொள்ளுமாறு சார்ந்த பள்ளித் தலைமைஆசிரியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

இணைப்பு

1. மாணவ / மாணவிகளின் பெயர் பட்டியல்
2. முதுகலை ஆசிரியர்களின் பெயர் பட்டியல்

// ஒப்பம் //

// க.முனுசாமி //

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்

வேலூர்

பெறுநர்

சம்பந்தப்பட்ட தலைமைஆசிரியர்கள்

வேலூர் மாவட்டம்

நகல்

1. சென்னை -6 ,மாநிலத்திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.
2. வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.
3. வேலூர், மாவட்டக் கல்வி அலுவலருக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.